
பெருவிழா அழைப்பிதழ் – 2025
செப்டம்பர்
6 முதல் 8 வரை
அனைவரும் வருக!
இறை ஆசீர் பெறுக!!
குமரியின் வேளாங்கண்ணி
கேட்ட வரம் தரும்
புனித ஆரோக்கிய அன்னை திருத்தலம், தாத்தூர்

ஆம் என்ற வார்த்தையினால் வரலாற்றைப் படைத்து
வரலாற்று நாயகனை தம் உதிரத்தில் சுமந்தாய்!
இதோ உன் ஆடிமை என்றாய் அனைவரின் தாய் ஆனாய்!
மனுகுல மீட்புக்காக தன் தவபுதல்வனை தாரைவார்த்து கொடுத்தாய்!
மண்ணக வாழ்வின் மாமரியே! விண்ணக வழிகாட்டியே!
இறைவனின் தாயே! எம் இதயத்தில் நீயே .....
நீ வாழ்க! நீ வாழ்க! நீ வாழ்க .....
என்று வாழ்த்துகின்றோம் உம் இனிய பிறந்தநாளில்,
ஆரோக்கியம் தரும் ஆரோக்கிய தாயே
எம் தூத்தூர் மண்ணில் குடிகொண்ட உம்மை
வாழ்த்தி உம்புகழ் பறைச்சாற்றுவோம்!



அன்பு நிறைந்த நெஞ்சங்களே...

அனைவருக்கும் பெருவிழா நல்வாழ்த்துகள் ...

முக்கடலும் முத்தமிடும் குமரி மாவட்டத்தின் கடற்கரை மாதிரிக் கிராமமே தூத்தூர். குறிப்பாக ஆழ்கடல் பிடிப்பதில் உலகளவில் புகழ் பெற்றவர்கள் வாழும் ஊர் இது மேலும் தமிழகத்தின் கால்பந்தாட்ட கிராமம் என்றும் அழைக்கப்படுகிறது. இங்கு, இயேசு கிறிஸ்துவின் பன்னிரு சீடர்களில் ஒருவரான புனித தோமையாருக்கு ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இதுவே திருவனந்தபுரம் உயர் மறைமாவட்டத்தின் தூத்தூர் மறைவட்ட முதன்மை ஆலயமுமாகும். மேலும், இந்தியாவின் இரண்டாவது சீடர் எனப் பெருமையாக அழைக்கப்படுகிற புனித பிரான்சிஸ் சவேரியாரின் புனிதப் பாதங்கள் கி.பி. 1544-லேயே பதிந்த புண்ணிய பூமி என்ற வரலாற்றுப் பெருமையும் இதற்குண்டு.

இத்திருத்தலப் பெருவிழா தாய் மரியின் ஆசீருடனும், எம் பேராயர் மேதகு. தோமஸ் ஜெ. நெற்றோ, துணை ஆயர் மேதகு. கிறிஸ்துதாஸ் மற்றும் மேனாள் பேராயர் மேதகு. சூசைபாக்கியம் அவர்களின் நல்லாதரவுடனும் வெகுச் சிறப்பாய் நடைபெறுகிறது. இவ்விழாவினை மத வேறுபாடின்றி அனைத்து மக்களும் மகிழ்வோடு கொண்டாடி வருகிறோம். மேலும், அனைவரும் ஒன்றாய் நல்லிணக்க விருந்து உண்பது தனிச்சிறப்பு.

தாய்த் திருச்சபை பிரகடனபடுத்திய எதிர்நோக்கின் திருப்பயணிகளாகவும் உன்னதத் தாயின் பரிந்துரையால் நலம் பல பெற்று சாட்சிகளாய் அலை அலையாய் இத்திருத்தலம் நாடிவரும் இறைமக்களுடன் நாளும் நடந்த நல்லவைகளுக்கும், அற்புதங்களுக்கும் நன்றி சொல்லவும், இனியெல்லாம் நலமாய் அமையவும் வரம் வேண்டி இறையாசீர் நம்மில் ஊற்றெடுக்க உங்களை அன்னையின் பிறப்புவிழா நிகழவில் பங்குபெற அகமகிழ்வோடு அழைக்கிறோம்.

இருளகற்றி ஒளிவீசுங்கள் ! வாழுங்கள் அன்னை வழியில் !!



பங்கு பணியாளர்

இவண் :
பணி. வே. செல்வராஜ் CMF, பங்கு தந்தை,
பணி. ப. நெப்போலியன் CMF, பங்கு பணியாளர்
அருள்பணியிலும் அர்ப்பண வாழ்விலும் இருபால் மண்ணின் மைந்தர்கள்,
அருள்சகோதரிகள், பங்கு பேரவை, பங்கு நிதிக்குழு, பங்கு மக்கள்,
இருபால் பக்த சபையினர், தூத்தூர் மறைவட்டார மக்கள், விழாகுழுவினர்.



பங்கு தந்தை

அனைவரும் வருக! இறையாசீர் பெறுக!!

உதவிக்கு : 9489176498, 9488154288, 9487127114, 9442987741, 8300789556, 9500736615, 9943285192,8300102414, 8667615255, 8838375235.

திருவழிபாட்டு நிகழ்வுகளை இணையம் மற்றும் நேரடி ஒளிப்பரப்பில் காணலாம்.

நேரடி ஒளிபரப்பில்
NILA TV

www.thoothoor.com
http://www.facebook.com/ThoothoorCOM
Nila TV

# நிகழ்வன



## 06-09-2025 சனிக்கிழமை

மாலை 5:00 மணி : **செபமாலை**

மாலை 6:00 மணி : **திருக்கொடியேற்றம்**

தலைமை : **பணி. செல்வராஜ்** CMF - பங்குத் தந்தை தூத்தூர்

திருப்பலி தலைமை : **பணி. டோணி ஜெரோம்**

பங்குத் தந்தை, கிறிஸ்து அரசர் ஆலயம், வெட்டுர்ணிமடம், கோட்டாறு மறைமாவட்டம்.

மறையுரை : **பணி. ஆ. சேவியர் கிளாடியஸ்**
பங்குத் தந்தை, புனித அந்தோனியார் ஆலயம், கொமாரப்பாளையம், கோவை மறைமாவட்டம்

## 07-09-2025 ஞாயிற்றுக்கிழமை

காலை 6:00 மணி : **திருப்பலி** தூத்தூர் புனித தோமையார் மறைவட்டார முதன்மை ஆலயத்தில் நடைபெறும்

காலை 9:30 மணி : **முதல் திருவிருந்து மற்றும் உறுதிப்பூசுதல் திருப்பலி**

தூத்தூர் புனித தோமையார் மறைவட்டார முதன்மை ஆலயத்தில் நடைபெறும்

மதியம் 1:00 மணி :
தூத்தூர் அரசு மருத்துவமனையுடன் இணைந்து வழங்கும்
**காசநோய் நோயாளிகளுக்கு**
**ஊட்டச்சத்து உணவுத் தொகுப்பு வழங்குதல்**
குறிப்பு: சாதி மத பேதமின்றி அனைவரும் பயன் பெறலாம்

மாலை 5:00 மணி : **செபமாலை**

மாலை 6:00 மணி : **நற்கருணை மாலை ஆராதனை**



தலைமை : **பணி. ஸ்டான்லி சகாய சீலன்**
தேசிய இயக்குனர், நல்லுலக இயக்கம் மற்றும்
வட்டார முதன்மை குரு, முட்டம் மறைவட்டம், கோட்டாறு.

மறையுரை : **பணி. சந்தியாகு** AFM
இயக்குனர், புனித அகுஸ்தினார் தியான மையம், குமுளி.

இரவு 8:00 மணி : **தேர்ப்பவனி**



## 08-09-2025 திங்கள்கிழமை

காலை 9:00 மணி : **திருமுழுக்கு** குறிப்பு: கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மட்டுமே பங்கு பெறுவதுடன் தங்கள் பங்குதந்தையின் உரிய கடிதம் பெற்று வரவும்

தலைமை : **பணி. ப. நெப்போலியன்** CMF பங்கு பணியாளர்.

மாலை 5:00 மணி : **சிறப்பு செபமாலை**

சிறப்பிப்போர் : திருவனந்தபுரம் மற்றும் கோட்டாறு மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளிலிருந்து வேளாங்கண்ணி திருத்தல நடைபயணம் செல்லும் பக்தர்கள், இளைஞர்கள், தூத்தூர் மறைவட்டார இறைமக்கள்.

மாலை 6:00 மணி : **பெருவிழா கூட்டுத்திருப்பலி**

தலைமை : **மேதகு ஆயர். நோயல் இம்மானுவேல்**
திரிகோணமலை மறைமாவட்டம், இலங்கை.

இரவு 8:00 மணி : **நல்லிணக்க விருந்து**

**திருவழிபாட்டு நிகழ்வுகள் மூன்று தினங்களும்**
**தூத்தூர் அரசு மருத்துவமனை மைதானத்தில் வைத்து நடைபெறும்**


JUBILEE 2025
PILGRIMS OF HOPE
எதிர்நோக்கின் யூபிலி ஆண்டு 2025
புனித திருமுழுக்கு யோவான்
பங்கு – பூத்துறை
புனித யூதா ததேயுஸ்
பங்கு – சின்னத்துறை
புனித நிக்கோலாஸ்
பங்கு – நீரோடி
புனித மரியன்னை
பங்கு – வள்ளவிளை
புனித கேத்ரினாள்
பங்கு – இரவிபுத்தன்துறை
புனித லூசியாள்
பங்கு – இரையுமன்துறை
புனித வியாகுல அன்னை
பங்கு – மார்த்தாண்டன்துறை
புனித தோமையார் மறைவட்டார முதன்மை ஆலயம்,
திருவனந்தபுரம் உயர் மறைமாவட்டம்,
தூத்தூர், கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு - 629 176
இணையம் : www.thoothoor.com